# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

<u>ஆணை எண். 177/ந/2025, நாள் 14.11.2025</u>

கு. குமரசாமி
வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
வேதாரண்யம் நகராட்சி, நாகப்பட்டினம் மாவட்டம். – எதிர்மனுதாரர்

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம், அகஸ்தியன்பள்ளி, பயத்தவரன்காடு கதவு எண்.15–ஏ என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கு. குமரசாமி என்பவரது 18.04.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.04.2025 அன்று பெறப்பட்டு, 177/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம், அகஸ்தியன்பள்ளி, பயத்தவரன்காடு கதவு எண்.15–ஏ என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கு. குமரசாமி என்பவரின் 18.04.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"நான் 10.04.2023–ம் தேதியில் அனுப்பிய புகாரின் அடிப்படையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் கடித ந.க.எண்.487/ந/2023, நாள்.03.10.2024–ன்படி வேதாரண்யம் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு எனது புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்க பணிக்கப்பட்டிருந்தது. இதன்படி வேதாரண்யம் நகராட்சி ஆணையர் அவர்கள் என்னை எவ்வித விசாரணையும் செய்யாமலும், தங்கள் உத்தரவுப்படி எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலும் இருந்த காரணத்தினால் நான் நினைவூட்டல் கடிதத்தை தங்களுக்கு அனுப்பியிருந்தேன்.

இதன்பிறகு தங்களது அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்துடன் வேதாரண்யம் நகராட்சி ஆணையர் அவர்கள், 15.11.2024–ம் தேதியில், நான் தங்கள் மேலான நீதிமன்றத்திற்கு எனது புகார் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று தெரிவித்தது போல் எனது கையெழுத்தை மோசடியாக போட்டு மோசடி ஆவணத்தை தங்கள் அலுவலகத்திற்கு வேதாரண்யம் நகராட்சி ஆணையரால் அனுப்பப்பட்டுள்ளது. நான் எனது புகாரை திரும்ப

பெற்றுக்கொள்வதாக எந்தவித கடிதமும் கொடுக்கவில்லை. 15.11.2024–ம் தேதியிட்ட கடிதம் என்பது மோசடியான வகையில் தயார் செய்யப்பட்ட கடிதம் ஆகும். இது சட்டப்படி குற்றச்செயல் என்பதால் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. நீதி பரிபாலன அமைப்பில் மோசடி ஆவணம் தயார் செய்து தாக்கல் செய்வது என்பதும் நீதிமன்ற நடவடிக்கைக்கு குந்தகத்தை ஏற்படுத்தக்கூடிய செயலாகும்." என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் ஏற்கனவே இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிய புகார் மனு நாள் 10.04.2023 மற்றும் 26.03.2025 ஆகியவற்றின் மீது வேதாரண்யம் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 02.04.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. வேதாரண்யம் நகராட்சி ஆணையரின் 9.05.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.2478/2024/அ1–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

"திரு. கு. குமரசாமி என்பவர் வேதாரண்யம் நகராட்சியில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன் கீழ் தகவல் கோரப்பட்டமைக்கு கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்பட்டது எனப் புகார் வரப்பெற்றது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விபரத்தினை தெரிவித்திட கோரப்பட்டது. மேற்படி திரு. கு. குமாரசாமி என்பவர் ஆணையர், வேதாரண்யம் நகராட்சிக்கு அளித்துள்ள கடிதத்தில் 12 ஆண்டுகளுக்கான சொத்துவரி கேட்பு பதிவேட்டில் Extract கோரப்பட்டதற்கு நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சான்று கட்டணம் ஆண்டிற்கு ரூ.100/– வீதம் 12 ஆண்டுகளுக்கு ரூ.1200/– செலுத்திட நகராட்சியால் தெரிவிக்கப்பட்டது எனவும், என்னிடம் Xerox கட்டணம் கூடுதலாக வசூலிக்கப்பட்டதாக தெரிவித்து நகராட்சியில் நான் நேரில் கேட்டபோது உரிய விவரங்கள் என்னிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து நகராட்சியில் நேரில் கேட்டு தெரிந்து கொண்டு, அவர்கள் பதிலில் சரித்தன்மையினை அறிந்து திருப்தி அடைந்தேன் எனவும், எனது பல்வேறு குடும்ப சூழலினால் ஏற்பட்ட மன உளைச்சலில் 10.04.2023 இல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு கடிதம் அனுப்பியதாகவும், நகராட்சியில் நேரில் தேவையான விபரங்கள் தெரிந்து கொண்டதால் எனது கடிதத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் தேவையில்லை. எனது கடிதத்தை திரும்ப பெற்றுக்கொள்கிறேன் என்று திரு. கு.குமாரசாமி அவர்கள் இவ்வலுவலக எழுத்தர் திரு. மோ. கார்த்திகேயன் மற்றும் வேதாரண்யம் கூட்டுறவு நிலவள வங்கி முன்னாள் துணைத் தலைவர் திரு. ஆர். எஸ். ராஜேந்திரன் என்பவர் முன்னிலையில் எழுத்துப்பூர்வமாக அவரே ஒப்பமிட்டு கடிதம் வழங்கியுள்ளார். அந்த கடிதம் மேற்படி விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்டது ஆகும். மோசடி ஆவணம் இல்லை.

தற்போது விண்ணப்பதாரர் தான் ஒப்பமிட்டு சமர்ப்பித்த ஆவணத்தை மோசடியாக தயார் செய்யப்பட்டது என நகராட்சி நிர்வாகத்தின் மீதான காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும், பிறரின் தூண்டுதல் பேரிலும் கடிதம் அனுப்பியுள்ளார். அது தொடர்பாக மேற்படி விண்ணப்பதாரரை வேதாரண்யம் நகராட்சியில் 05.05.2025 அன்று நேரில் ஆஜராகிடவும், தொடர்ந்து அவரிடம் விசாரணை மேற்கொண்டு விண்ணப்பதாரரின் குறைகளை நிவர்த்தி செய்துதரும் நோக்கில் விண்ணப்பதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

ஆனால் மேற்காணும் விண்ணப்பதாரர் 05.05.2025–ல் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தில் நகராட்சியில் ஆஜராகவில்லை என பதில் கடிதம் அனுப்பி உள்ளார் என்ற தகவல் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான வேதாரண்யம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 25.09.2025 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ளுமாறு 18.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரா் திரு. கு. குமரசாமி என்பவர் 25.09.2025 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளாா்.

"நான் வேதாரண்யம் நகராட்சியின் சொத்துவரி கேட்பு பதிவேட்டின் நகலினை கேட்டு RTI மூலம் விண்ணப்பித்திருந்தேன். RTI கட்டணம் ரூ.1,200/– கட்ட நகராட்சியால் தெரிவிக்கப்பட்டது. அதற்கான தொகையும் நான் கட்டிவிட்டேன். இது குறித்து 10.04.2023–ம் தேதியில் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிய புகாரின் அடிப்படையில் மாண்புமிகு முறைமன்ற நடுவ அலுவலகத்திலிருந்து வேதாரண்யம் நகராட்சி ஆணையா் அவா்களுக்கு எனது புகாா் மீது உரிய நடவடிக்கை எடுக்க பணிக்கப்பட்டிருந்தது.

தங்களது உத்தரவுப்படி எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், நகராட்சி ஆணையா் 15.11.2024–ஆம் தேதியில் எனது புகாா் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என நான் தெரிவித்தது போல் எனது கையெழுத்தை மோசடியாக போட்டு தங்கள் அலுவலகத்திற்கு வேதாரண்யம் நகராட்சி ஆணையரால் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு நான் எதுவும் கையெழுத்து போடவில்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு தெரிவித்துக்கொள்கிறேன். மோசடியாய் எனது கையெழுத்தை இட்டவா்கள் யாா் என்பதை தாங்கள் விசாாித்து தவறு செய்தவா்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு இம்முறைமன்ற நடுவா் அவா்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளாா்.

6. எதிர்மனுதாரரான வேதாரண்யம் நகராட்சி ஆணையாின் 23.09.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண். 2478/2024/அ1 –ல் 25.09.2025 அன்று மாவட்ட ஆட்சித் தலைவா் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் தொடா்பான ஆய்வு கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளதால், தனது சாா்பாக நகராட்சியில் உதவியாளராக பணிபுாியும் திரு. K. கிருஷ்ணன் என்பவரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.09.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் உரிய ஆவணங்களுடன் நேரில் வருகை தந்து விவரம் தெரிவிப்பாா் என தெரிவிக்கப்பட்டதைத் தொடா்ந்து, 25.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நகராட்சி உதவியாளா் நேரில் கலந்து கொண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவா் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளாா்.

"திரு. கு. குமரசாமி என்பவா், வேதாரண்யம் நகராட்சி ஆணையருக்கு அளித்துள்ள கடிதத்தில் 12 ஆண்டுகளுக்கான சொத்துவாி கேட்பு பதிவேட்டின் Extract தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்டதற்கு, நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சான்றுக்கட்டணம் ஆண்டிற்கு ரூ.100/– வீதம் 12 ஆண்டுகளுக்கு ரூ.1200/– செலுத்திட நகராட்சியால் தெரிவிக்கப்பட்டது. அதன்படி ரூ.1200/– மனுதாரரால் செலுத்தப்பட்டது. தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் ஆவணங்கள் ஒரு பக்கத்திற்கு ரூ.2/– மட்டுமே பெறப்பட வேண்டும் என எனக்கு தெரிந்திருந்தாலும் ரூ.1200/– என பெறப்பட்டது சம்மந்தமாக கூடுதல் கட்டணம் நிா்ணயம் செய்யப்பட்டதா? என எனக்குத் தெரியாது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்

மேலும், மனுதாரா் தான் கோாிய விவரங்கள் நகராட்சியால் வழங்கப்பட்டு சாித்தன்மை அறிந்து திருப்தி அடைந்ததாகவும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளுக்கான முறைமன்ற நடுவத்திற்கு அளித்த புகாாினை திரும்ப பெற்றுக்கொள்கிறேன் என எழுதிக்கொடுத்துள்ள கடிதத்தில் உள்ள மனுதாராின் கையொப்பம் தனது இல்லை எனத் தெரிவித்திருப்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளாா்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் வேதாரண்யம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, மனுதாரரின் வாக்குமூலம், எதிர்மனுதாரரான வேதாரண்யம் நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி உதவியாளரின் வாக்குமூலம் மற்றும் இதர ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரரால் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005ன் படி பக்கம் ஒன்றிற்கு கட்டணமாக ரூ. 2/– வசூலிக்கப்பட வேண்டிய நிலையில், மனுதாரரிடமிருந்து ரூ.1,200/– கட்டணமாக வேதாரண்யம் நகராட்சியால் பெறப்பட்டுள்ளதும், வேதாரண்யம் நகராட்சியால் சமர்ப்பித்துள்ள மனுதாரரின் 15.11.2024 நாளிட்ட கடிதம் போலியானது என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரரால் 12 ஆண்டுகளுக்கான சொத்துவரி கேட்பு பதிவேட்டின் Extract கோரப்பட்டதற்கு நகராட்சி சான்று கட்டணமாக ஆண்டிற்கு ரூ.100/– வீதம் 12 ஆண்டுகளுக்கு ரூ.1200/– என கணக்கிட்டு வசூலிக்கப்பட்டுள்ளதற்கான விவரங்களை மனுதாரருக்கு நேரில் தெரிவித்ததால், மனுதாரரின் புகார் மனு மீது எந்தவித நடவடிக்கையும் தேவையில்லை என வேதாரண்யம் நகராட்சி எழுத்தர் மற்றும் வேதாரண்யம் கூட்டுறவு நிலவள வங்கி முன்னாள் துணைத் தலைவர் ஆகியோர் முன்னிலையில் எழுத்துப்பூர்வமாக ஒப்பமிட்டு கடிதம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரரின் கடிதம் மோசடி ஆவணம் இல்லை எனவும் ஆணையரின் அறிக்கை வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 –ன் கீழ் ஆவணங்கள் வழங்க பக்கம் ஒன்றுக்கு ரூ.2/– மட்டுமே வசூலிக்க வேண்டும் என தனக்கு தெரியும் எனவும், வேதாரண்யம் நகராட்சியால் ரூ.1200/– வசூலிக்க கூடுதல் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டதா ? என்ற விவரம் தெரியாது எனவும், மனுதாரரால் அளிக்கப்பட்ட புகாரினை திரும்ப பெற்றுக்கொள்வதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனு குறித்து எதுவும் தெரியாது எனவும் வேதாரண்யம் நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி உதவியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில், வேதாரண்யம் நகராட்சி ஆணையரின் 23.09.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.2478/2024/அ1–ல் நகராட்சி உதவியாளர் உரிய ஆவணங்களுடன் நேரில் வருகை தந்து விசாரணையில் விவரம் தெரிவிப்பார் என தெரிவிக்கப்பட்ட நிலையில், விசாரணைக்கு ஆஜரான நகராட்சி உதவியாளர் சான்றுக்கட்டணம் வசூலித்தல் குறித்தும், மனுதாரரின் புகார் மனு திரும்ப பெறப்பட்டது குறித்தும் தனக்கு எதுவும் தெரியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது விந்தையாக உள்ளது. இம்முறைமன்ற விசாரணை தொடர்பிலான புகார் மனுமீதான தகவல் ஏதும் தெரியாத ஒருவரை விசாரணைக்கு அனுப்பி வைத்துள்ள நகராட்சி ஆணையரின் செயல் கண்டனத்துக்குரியதாகும்.

மனுதாரரின் புகார் மனு தொடர்பாக வேதாரண்யம் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளில் தவறு நடந்திருப்பது ஆணையரின் அறிக்கை மற்றும் ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி உதவியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது. எனவே, மனுதாரரிடம் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.1,200/–லிருந்து மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துவரி கேட்பு பதிவேட்டின் Extract வழங்க தகவல் உரிமைச் சட்ட விதிமுறைகளில் உள்ள தொகையை கணக்கிட்டு, வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து அத்தொகையினை பிடித்தம் செய்து கொண்டு எஞ்சிய தொகையினை மனுதாரருக்கு வழங்கிட தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேதாரணயம் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரரின் புகார் மனுவில் உள்ள கையொப்பமும், மனுதாரரால் புகார் மனு திரும்ப பெறப்பட்டதாக தெரிவித்து ஆணையரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களில் உள்ள மனுதாரரின் கையொப்பங்களிலும் வேறுபாடுகள் இருப்பதாக இம்முறைமன்றம் கருதுவதால், மனுதாரரின் போலியான கையொப்பம் இடப்பட்டு ஆணையரால் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து தடய அறிவியல் இயக்கத்திடம் (Directorate of Forensic Sciences Department) இருந்து அறிக்கை பெற்று, அதனடிப்படையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் மூலம் விரிவான விசாரணை மேற்கொண்டு, தவறு செய்தவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 14–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.கு. குமரசாமி,
எண்.15ஏ, பயத்தவரன்காடு,
அகஸ்தியன்பள்ளி, வேதாரண்யம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
வேதாரண்யம் நகராட்சி,
நாகப்பட்டினம் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032